**ஆலையடிவேம்பு பிரதேச சபை**
**அம்பாரை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து ஆலையடிவேம்பு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) ரூபா 4,950,000 பெறுமதியான 11 வாகனங்களின் உரிமை சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தும் அப்பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறித்த வாகனங்களின் பெறுமதி காட்டப்படல் வேண்டும் | விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விலை மதிப்பீடுகள் முடிவடைந்த பின்னர் வாகனங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் வாகனங்கள் என தனித்து பிரித்து காட்டப்படும். |
| (ii) 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான அறவிட வேண்டிய முத்திரைக்கட்டணம் ரூபா545,250 கணக்குகளில் காட்டப்படவில்லை. | அறவிட வேண்டிய நிலுவைகள் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது முழுமையாக தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் மேலும் குறித்த தொகையானது எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்குகளில் காட்டப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |
| (iii) பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்பிலிடப்பட்ட நிலையான வைப்பின் மீதான மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 110,560 தொகையானது கணக்குகளிற்கு | பெறவேண்டிய வட்டி வருமானம் கணக்குகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். | பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிலையான வைப்பு மீதான வட்டி வருமானமான தொகை குறித்த காலப்பகுதிக்குள் தொகையினை அறிந்து கொள்ளமுடியாத சூழ்நிலை காரணமாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்குகளுக்குள் எடுத்துக் கொள்ளமுடியவில்லை. மேலும் |

| | | |
|---|---|---|
| கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது குறிப்பிட்ட வட்டி வருமானம் கணக்குகளில் காட்டப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 166,462,154 பெறுமதியான 05கணக்கு விடயங்களுக்கு உரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, உரிமைப் புத்தகங்கள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்படவேண்டிய அனைத்து விடயங்களும் மற்றும் தகவல்களும் முழுமையாக பெறப்பட்ட பின்னர் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தயாரிப்பதற்கான நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சபைக்கு சொந்தமான காணிகளுக்குரிய உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது காணியின் உறுதி கிடைக்க பெற்றபின்னர் அதன் பிரதி தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். |

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | | | |
| (i) பிரிவு 5(12) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பமிடல் மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப் பட்டிருந்த போதிலும், அவர்களிடமிருந்து பாதுகாப்புப் பிணை பெறப்பட்டிருக்கவில்லை | பாதுகாப்புப் பிணை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் அத்தொகையானது உத்தியோகத்தர் களிடமிருந்து அறிவீடு செய்யப்பட்டு பாதுகாப்பு பிணை வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய | முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் தயாரிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 10 வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |
| (இ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாவ நிதி (EPF ) மற்றும் 1980 ஆம் ஆண்டின் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) சட்டத்தின் பிரகாரம். | EPF மற்றும் ETF நிதியத்திற்கான பங்களிப்பானது மாத மொத்த வேதனத்தின் மீது கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இருந்த போதிலும் அமைய ஊழியர்களின் வேதனத்தின் பங்களிப்பானது அடிப்படை வேதனத்தில் கணிப்பீடு செய்தமையினால் மீளாவாண்டில் முறையே EPF ரூபா 124,178 வும் ETP ரூபா 18,826 வும் குறைவாகபங்களிப்புச்செய்யப் பட்டுள்ளது | விதிகள் சட்டத்தின் பிரகாரம் நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்பட வேண்டும். | சபையினால் ஆகஸ்ட் மாதம் முதல் ஊழியர்களின் மாத மொத்த வேதனத்தில் இருந்து பங்களிப்பு செய்யப்படுகின்றது என்பதோடு இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் முழுமையாக தவிர்க்கப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன். |
| (ஈ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உதிர்பாகங்கள், கனணி மென் பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைவாக தனியான பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணனிகள் தொடர்பான நிலையான சொத்துக்களின் பதிவேடு (பொது-287) சபையினால் தயாரிக்கப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 1,566,243 ஆக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்கலிலும் கூடிய வருமானம் ரூபா 10,874,998 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,000,000 | 727,030 | 501,192 | 225,838 | 250,000 | 722,161 | 722,161 | -- |
| வாடகைகள் | 2,500,000 | 3,100,398 | 3,018,125 | 623,591 | 1,990,000 | 2,072,814 | 2,137,874 | 541,318 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 900,000 | 652,330 | 652,330 | 16,680 | 805,000 | 671,877 | 671,877 | 16,680 |
| ஏனைய வருமானம் | 14,541,000 | 9,121,158 | 4,535,808 | 4,585,350 | 13,381,000 | 11,803,112 | 11,803,112 | -- |
| | 18,941,000 | 13,600,916 | 8,707,455 | 5,451,459 | 16,426,000 | 15,269,964 | 15,335,024 | 557,998 |

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டில் சபையின் எல்லைக்குள் ஒரு திரையரங்கு, ஐந்து நொத்தாரிசு அலுவலகங்கள் மற்றும் ஒரு வாகனத் தரிப்பிடம் என்பன 2018 இல் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதிலும், வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் பிரதேச சபைகள் சட்டம் 150 (1) இன் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | உரிமைப் பத்திரக் கட்டணங்கள் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளை தவிர்த்து முழுமையாக உரிமைப் பத்திரக் கட்டணங்கள் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 1,995,402 தொகை நீதிமன்ற தண்டப்பணமானது 2017 ஏப்ரல் தொடக்கம் செப்டெம்பர் வரைக்குமான நிலுவைகளாகும், இருந்தும் 2018 ஆம் ஆண்டு இறுதி வரைக்குமான நீதிமன்ற தண்டப்பணத்தை முழுமையாக பெறுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2019 மே 31 ஆம் திகதி வரை சபையால் நடவடிக்கை | உரிய காலப்பகுதிக்குள் தண்டப்பணத்தை பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணத்தை உரிய காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு காலதாமதங்கள் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றினை முழுமையாக நீக்கி உரிய நடைமுறையினை பின்பற்றி மற்றும் தொடர்ச்சியான எழுத்து மூலமான நினைவூட்டல் ஊடாக விரைவாக நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுகொள்வதற்கு இனிவரும் காலங்களில் சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அறியத்தருகின்றேன். |

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வையினை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முத்திரை தீர்வையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2017ம் ஆண்டுக்கான முத்திரைத் தீர்வை அறவீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் 2018 டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கான முத்திரை தீர்வை கணிப்பீடு செய்யப்பட்டு கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை சபையினால் மேற்கொள்ளப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 வரை 14 விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 05 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2016 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் கண்ணகி புறத்தில் குப்பைகளை சேகரித்து சேதனப் பசளைகளை தயாரிப்பதற்கான திண்மக்கழிவு அகற்றும் நிலையம் ரூபா 1,253,940 செலவில் நிர்மாணிக்கப்பட்டு அத்துடன் 2018 ஆம் ஆண்டு குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்திக் கொடையின் கீழ் ரூபா 1,210,000 பெறுமதியான 02 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2019 மே 28 திகதி வரை பயன்படுத்துவதற்கான சாத்திய வள ஆய்வுகள் மற்றும் திட்டமிடல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்காமையினால் திண்மக் கழிவு அகற்றுவதற்காக 2018 ஆண்டுக்காக ரூபா709,842 அட்டாளைச் சேனை பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குறித்த திண்மக்கழிவு அகற்றும் நிலையத்தினை மீண்டும் இயங்கச் செய்து கொள்வனவு செய்யப்பட்ட 02 இயந்திரங்ளையும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பொதுமக்களுடன் கலந்துரையாடி மற்றும் தெளிவுபடுத்தல் நடவடிக்கையினை மேற்கொண்டு அதற்கான தீர்வு நடவடிக்கையினை சபையினால் எடுக்கப்பட்டு குறித்த திண்மக்கழிவு அகற்றும் நிலையத்தினை மீண்டும் இயங்கச் செய்து கொள்வனவு செய்யப்பட்ட 02 இயந்திரங்ளையும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்தல். | எதிர்வரும் காலங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை கொண்டு 2030ம் ஆண்டு வரைக்குமான அபிவிருத்தியினை இலக்காக கொண்ட திட்டங்களை அடையாளப்படுத்தி சபையினால் தயாரிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2017 செப்டம்பர் 15 ஆம் திகதியில் பொது நூலகரினால் திருத்த வேலைகள் செய்யவேண்டி தெரிவிக்கப்பட்டிருந்தும், மீளாய்வாண்டில் இத்திருத்த வேலைகள் செய்யப்படாததால், பொது நூலகத்தின் உடைந்த கூரையிலிருந்து மழை நீர் சென்றுள்ளதுடன் புறாக்களின் எச்சத்துடன் காணப்பட்டன. இதனால் அங்குள்ள பெறுமதி வாய்ந்த அரிய பல நூல்கள் பழுதடையும் நிலையிலும், இப் | நூலகத்தின் திருத்த வேலைகளை மிக விரைவில் மேற்கொண்டு புத்தகங்களை பாதுகாக்கவும், வாசகர்களின் பயன்பாட்டுக்கு விடவும் | இவ்பொது நூலகத்தின் திருத்த வேலைகளை மிக விரைவில் மேற்கொண்டு புத்தகங்களை பாதுகாக்கவும், வாசகர்களின் பயன்பாட்டுக்கு விடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| பகுதியினை வாசகர்கள் 2018 மார்ச் 24 ஆம் திகதியிலிருந்து பயன் படுத்தப்படாமலும் காணப்பட்டன. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) 2017 ஆம் ஆண்டு வருடாந்த இருப்புச் சுற்றாய்வுச் சபையின் சிபாரிசுகளிற்கமைய தொடர் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு மீதான தொடர் நடவடிக்கைகள் உரிய காலத்தில் எடுத்தல் வேண்டும். | 2017ம் ஆண்டில் பழுதடைந்தவை என குறிப்பிடப்பட்ட 75 புத்தகங்களும் 2018ம் ஆண்டு பொருட் கணக்கெடுப்பில் உள்வாங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) நீர் இணைப்புப் பெறுவதற்காக அகழப்பட்ட வீதியை மீள நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக 114 குடியிருப்பாளர்களிடமிருந்து 2018 ஆம் ஆண்டு ரூபா 233,100 நீர் இணைப்பு அனுமதியுடன் அறவீடு செய்யப்பட்டிந்தது. இருந்த போதிலும், இன்று வரைக்கும் அகழப்பட்ட வீதிகள் புனரமைக்கப்படவில்லை. | சபையினால் அகழப்பட்ட வீதிகளை முழுமையாக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேணடும். | இனிவரும் காலங்களில் நீர் இணைப்புக்காக வெட்டப்படும் குழியினை காலாண்டுக்கு அல்லது அரையாண்டுக்கு ஒருமுறை சபையினால் முழுமையாக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் 08 வகையான பதவிக்கு 08 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான முறையான நிர்வாக நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும். | இவ்விடயம் தொடர்பாக உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி பதவி வெற்றிட ஆளணியினை நிரப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் அல்லது அசைவற்ற ஆதனத்தின் எவையேனும் இனங்களின் ஆண்டுப் பெறுமானத்தின்மீது வீதவரிகள் விதிக்க முடியும். இருப்பினும், சபை இது தொடர்பில் மேற்படி சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் துணை விதியை உருவாக்கி சபை எல்லைக்குட்பட்ட 4,821 நிரந்தர வீடுகள் மற்றும் 663 கடைக் கட்டிடங்களுக்குமான சோலைவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட அபிவிருத்தி யடைந்த பிரதேசங்களை இனங்கண்டு அப்பிரதேசங்களில் சோலைவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் சபையின் வருமானத்தை அதிகரிக்கலாம். | தற்போது காணப்படும் சபை ஊடாக இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானமொன்றினை மேற்கொண்டு எதிர்காலத்தில் சோலைவரிகளை அறிவீடு செய்வதற்கும் நடவடிக்கை சபையால் எடுக்கப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 158,905,253 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் காலப்பகுதியில் நிலையான சொத்துப் பதிவேடு முழுமையாக தயாரிக்கப்பட்டு சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தனித்தனியாக கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 07 வாகனங்கள் 04 ஆண்டுகளிற்கு மேலாக திருத்தியமைத்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது சபைக்குச் சொந்தமான இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை திருத்தி மீளப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த வாகனங்களை விரைவாக திருத்தி பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும. |

### 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இனிவரும் வருடங்களில் ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்ப்படும். |
| (ஆ) பெறுகைகள் வழிகாட்டி 3.9.1 இன் நிபந்தனையின்படி வழங்கப்பட்ட ஒப்பந்த வேலைகள் ஒப்பந்தக்காரரினால் உப ஒப்பந்தம் செய்யமுடியாது. இருந்த போதிலும் வேறு ஒருவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டி இன் நிபந்தனைகளுக்கு அமைவாக உப ஒப்பந்தம் செய்யப்படலாகாது. | இனிவரும் காலங்களில் உப ஒப்பந்த நடவடிக்கையினை மேற்கொள்வது முழுமையாக தடுக்கப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். |